# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**SPECIAL COURT TO DEAL WITH THE CASES OF OFFENCES IN CONTRAVENTION OF THE PROVISIONS OF THE MINES AND MINERALS (D&R) ACT, 1957, MADURAI**

**************

| | | |
|---|---|---|
| Case No | : | Spl.C.C.No.202-2021 |
| Deposition of witness | : | LW 1 / PW 8 |
| Name | : | **திரு. இல. சுப்பிரமணியன்** |
| Father's Name | : | இலட்சுமணன் |
| Village | : | சென்னை |
| Taluk | : | சென்னை |
| Calling | : | தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணைய உறுப்பினர் ஓய்வு |
| Age | : | 61/26 |
| **Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.08.2026** | | |

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சி தொடங்கிய நேரம் : 11.17 AM

**முதல் விசாரணை :**

நான் தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்குமுறை ஆணைய உறுப்பினர் பணியில் இருந்து தற்போது ஓய்வு பெற்றுள்ளேன் . இதற்கு முன்பாக மதுரை மாவட்ட ஆட்சியராக கடந்த 2013 முதல் 2016 வரை பணியாற்றினேன். மதுரை மாவட்ட ஆட்சியராக பணியாற்றிய காலகட்டத்தில் மதுரை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் சட்டத்திற்கு புறம்பாக குவாரி பணிகள் மேற்கொள்ளப்பட்டு அனுமதியின்றி

NANTHINI R JEGANATHAN

Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.13 17:29:43 +0530

கிரானைட் கற்கள் கடத்தப்படுவதாவும் , அரசு மற்றும் பட்டா நிலங்களில் அனுமதியில்லாமல் கிரானைட் கற்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளதாகவும் , புகார்கள் பெறப்பட்டு அதன் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது கனிமமும் சுரங்கமும் (மேம்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல் ) சட்டம் 1957 ன் படி நடவடிக்கை கள் எடுக்கப்பட்டது. அரசாணை 3026 தொழில், தொழிலாளர்கள் மற்றும் வீட்டு வசதி துறை, நாள் 19.07.1966 ன் படி எனக்கு கனிமமும் சுரங்கமும் (மேம்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் 1957 பிரிவு 22 ன் கீழ் வழக்கு தாக்கல் செய்வதற்கு அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ளது . குற்றம் சாட்டப்பட்டுள்ள திரு .ஆனந்த் த /பெ. சுப்பையா என்பவர் மதுரை , பி.பி.குளம், காந்திஜி தெரு , கதவு எண் .246 என்ற முகவரியில் வசித்து வருகிறார். மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், வஞ்சிநகரம் கிராம புல எண்.398/3 ல் கண்டுள்ள 0.65.0 ெஹக்டேர் புன்செய் நிலம் பட்டா எண் .2188 ன் படி குற்றம் சாட்டப்பட்ட ஆனந்த் என்பவருக்கு சொந்தமானது ஆகும் . இதனை கருங்காலக்குடி சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து 01.07.1987 முதல் 25.08.2014 வரை பெறப்பட்ட வில்லங்கம் இல்லா சான்றிதழ் மூலம் உறுதி செய்யப்பட்டது . என்னிடம் காண்பிக்கப்படும் வில்லங்க சான்றிதழ் தான் மேற்படி ஆவணம் ஆகும் . அந்த ஆவணம் (4 பக்கங்கள்) **Ex.P.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (ஜெராக்ஸ் நகல் என்ற எதிரி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). வருவாய் ஆவணங்களில் இருந்தும் மேற்கண்ட புல எண் குற்றம்

NANTHINI R JEGANATHAN

Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.13 17:29:49 +0530

சாட்டப்பட்ட நபருக்கு சொந்தமானது என்று உறுதி செய்யப்பட்டது . மதுரை மாவட்டத்தில் சட்டவிரோதமாக நடைபெற்ற குவாரி பணிகளை ஆய்வு செய்வதற்காக மாவட்ட ஆட்சித்தலைவரால் கேட்டுக்கொண்டதற்கிணங்க சென்னை புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையர் அவர்களால் துணை இயக்குநர் , உதவி இயக்குநர், உதவி புவியியலாளர்கள் , சர்வேயர்கள் மற்றும் இதர அலுவலர்கள் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டது. அதன்பேரில் குழு எண் .3 மற்றும் 13 ஐ சார்ந்த உதவி புவியியலாளர்கள் திரு .ஜான் ஜேம்ஸ் மற்றும் விஜயராகவன் ஆகியோருடன் நில அளவர்கள் திரு .ராஜேந்திரன் மற்றும் வேலு மற்றும் வஞ்சிநகர கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர் ஆகியோர் 23.07.2013 அன்று குற்றம் சாட்டப்பட்டவரின் புல எண்.398/3 ற்கு சென்று ஆய்வு செய்து அங்கு சட்டவிரோதமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த கிரானைட் கற்துண்டங்களை பார்வையிட்டதன் அடிப்படையில் 46 கிரானைட் கற்துண்டங்கள் அதன் மொத்த அளவு 335.192 கனமீட்டர் எனவும், அவை சட்டவிரோதமாக அனுமதியின்றி அடுக்கி வைக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவித்து பட்டியல் தயார் செய்து திரு .பெருமாள், துணை இயக்குநர் அவர்களால் 08.11.2013 அன்று மாவட்ட ஆட்சியத்தலைவரான என்னிடம் வழங்கப்பட்டது . அது ஏற்கனவே Ex.P.1 series ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது . துணை இயக்குநர் திரு.பெருமாள் அவர்களால் வழங்கப்பட்ட ஆய்வறிக்கை ஆய்வு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் கனிமமும் சுரங்கமும் சட்டத்தின்படி சட்டவிரோதமாக அடுக்கி

NANTHINI R JEGANATHAN
Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.13 17:29:54 +0530

வைக்கப்பட்டுள்ள கிரானைட் கற்துண்டங்களை கைப்பற்றுவதற்கு G.O.MS. No.1664 (IND) Department நாள் 08.12.1981 ன்படி அதிகாரம் வழங்கப்பட்ட மேலூர் வட்டாட்சியர் திரு .எஸ்.மணிமாறன் என்பவருக்கு என்னால் உத்தரவிடப்பட்டதன் பேரில் 27.08.2014 அன்று வட்டாட்சியர் திரு .மணிமாறன், வஞ்சிநகரம் கிராம நிர்வாக அலுவலர், வெள்ளலூர் உள்வட்ட வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம உதவியாளர்களுடன் குற்றம்சாட்டப்பட்ட நபரின் புல எண்.398/3 ல் சட்டவிரோதமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த 46 கிரானைட் கற்துண்டங்களை கைப்பற்றியும் , கைப்பற்றுகை மகஜர் தயார் செய்தும் , சம்பந்தப்பட்ட நபர்களிடம் கையொப்பம் பெறப்பட்டது. கைப்பற்றுகை செய்யப்பட்ட கிரானைட் கற்துண்டங்கள் அளவில் பெரியதாகவும், எளிதில் எடுத்துச் செல்ல முடியாத காரணத்தினாலும் கைப்பற்றப்பட்ட இடத்திலேயே வைத்து முத்திரையிடப்பட்டுள்ளது . மேற்கண்ட கற்துண்டங்கள் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர்கள் மூலமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது . கைப்பற்றுகை செய்யப்பட்ட கற்துண்டங்கள் சூரிய ஒளியிலும், இயற்கையான தட்பவெப்ப சூழ்நிலையிலும் உள்ளதால் கற்களில் வேதியியல் மாற்றங்கள் ஏற்படுவதற்கும் , விரிசல்கள் ஏற்படுவதற்கும் வாய்ப்புள்ளதோடு கற்துண்டங்களில் மதிப்பு குறைவதற்கும் வாய்ப்புள்ளது . எனவே, அரசின் நலன் கருதி கைப்பற்றுகை செய்யப்பட்ட கிரானைட் கற்துண்டங்களை அரசுடைமை ஆக்கி அவற்றை விற்பனை செய்ய வேண்டிய அவசியம்

NANTHINI R JEGANATHAN

Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.13 17:29:59 +0530

ஏற்பட்டுள்ளது. கனிமமும் சுரங்கமும் (மேம்படுத்துதல் மற்றும் முறைப்படுத்துதல் ) சட்டம் 1957, பிரிவு 4 (1-A) ன் படி கிரானைட் கற்துண்டங்களை இருப்பு வைப்பதற்கோ, ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கோ உரிய அனுமதி பெறப்பட வேண்டும். குற்றம் சாட்டப்பட்ட நபர் அரசிடம் இருந்து எந்தவிதமான அனுமதியும் பெறவில்லை. எனவே, குற்றம் சாட்டப்பட்டவரின் அனுபவத்தில் உள்ள புல எண்.398/3 ல் 46 கிரானைட் கற்துண்டங்கள் சட்டவிரோதமாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளதால் சம்பந்தப்பட்ட நபர் மீது தண்டனை வழங்குமாறு மேற்கண்ட கற்துண்டங்களை கைப்பற்றி அரசுடைமை ஆக்கி நடவடிக்கை எடுக்க தனிப்புகார் தாக்கல் செய்துள்ளேன்.

**குறுக்கு விசாரணை :**

இந்த தனிப்புகார் தாக்கல் செய்வதற்கு முன்பாக மதுரை மாவட்டத்தில் நடைபெறும் கிரானைட்குவாரிகள் சம்பந்தமாக கோப்புகளை பார்வையிட்டு அதன்பிறகு தனிப்புகார் தாக்கல் செய்தேனா என்றால் இந்த புகார் சம்பந்தமாக கோப்புகள் என்னால் ஆய்வு செய்யப்பட்டது. இந்த நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த தனிப்புகாரின் நகலை பார்த்து தான் தற்போது முதல் விசாரணையில் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். நான் தனிப்புகாரின் புகார்தாரர் என்ற அடிப்படையில் தனிப்புகாரை பார்த்து முதல் விசாரணையில் சாட்சியம் சொல்வது சட்டப்படி ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. அவ்வாறு சட்டத்தில் விதிகள் எதுவும் இல்லை.

NANTHINI R JEGANATHAN Digitally signed by NANTHINI R JEGANATHAN Date: 2026.08.13 17:30:03 +0530

Ex.P.7 ல் உள்ள covering letter மற்றும் இணைப்புகள் அசலாகத்தான் எனக்கு அனுப்பப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். Ex.P.7 ன் அசலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால்சரிதான். வில்லங்க சான்று மற்றும் 4 ஆவண நகல்கள் இத்துடன் இணைக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அவை Ex.P.7 ல் இல்லை என்றால் அவசியல் இல்லை என்பதால் தாக்கல் செய்யப்படவில்லை. Ex.P.7 ஆவணத்தின் முழுமையான ஆவணங்கள் தனிப்புகாருக்கு விரோதமாக இருப்பதால் அவை மறைக்கப்பட்டுள்ளது என்றால் தவறு. Ex.P.1 ல் மொத்தம் 5 தாள்கள் உள்ளது என்றால் சரிதான். அதன் முதல் தாள் திரு.பெருமாள் என்பவர் எனக்கு அனுப்பிய கடிதத்தின் covering letter என்றால் சரிதான். Ex.P.1 ன் 2, 3, 4, 5 ஆகிய தாள்கள் அந்த covering letter ன் இணைப்பு கிடையாது என்றால் சரிதான். Ex.P.1 ன் முதல் தாளில் பெருமாள் எனக்கு அனுப்பிய covering letter ன் இணைப்புகள் இன்றைய தேதி வரை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான் . தேவையில்லை என்பதால் தாக்கல் செய்யப்படவில்லை. எனது தனிப்புகாரின் அடிப்படையில் பெருமாள் அவர்கள் 08.11.2013 ல் கொடுத்த எனக்கு அறிக்கையின் அடிப்படையில் இந்த புகார் தாக்கல் செய்யப்பட்டதாக சொல்லப்படும் சூழ்நிலையில் அந்த அறிக்கைகள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் அந்த அறிக்கை இந்த எதிரிக்கு சாதகமாக இருப்பதாகவும் , தனிப்புகாருக்கு விரோதமாக இருப்பதாகவும்

NANTHINI R JEGANATHAN
Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.13 17:30:08 +0530

சொல்லப்படுகிறது என்றால் சரியல்ல . 25.03.2013 ம் தேதி திரு .அதுல் ஆனந்த் ஐஏஎஸ், கமிஷனர், புவியியல் துறை அவர்கள் பத்தி 2 ல் in the reference 2nd cited , The District Collector, Madurai has issued orders assaining various item of work vice inspection as all the stockyards, to verify their location, classification of granite blocks, with unique number, volume of granite blocks, each stockyard, to ascertain surface right of the field, look in the stockyards, to acsertain the quantity and quality of granite blocks kept in the stockyards to arrive at the market price of the granite blocs to assist the District Collector to regard to filing of complaint with the Jurisdiction Magistrate and for the seizure, confiscation and auction of unauthorised of the stock of granite blocks என்ற நோக்கத்திற்காகத்தான் புவியியலாளர்கள் நியமிக்கப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். Ex.P.2 அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள கற்கள் புல எண் .398/3 ன் எவ்வளவு விஸ்தீரணத்தில் இருப்பதாகவும், அந்த எண்ணில் எந்த திசையில் இருப்பதாகவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான் . Ex.P.2 ல் சொல்லப்பட்டுள்ள படி அதில் உள்ள கற்கள் அனைத்தும் B கிரேடு கற்கள் என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் சொல்லப்பட்டுள்ளபடி B என்பது contains mafic minerals / vertical, inclined crack/shapeless block என்று வரையறை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் . இந்த தனிப்புகாரில் நான் தாக்கல் செய்த எந்த ஒரு

NANTHINI R JEGANATHAN

Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.13 17:30:14 +0530

ஆவணத்திலும் அந்த கற்களின் மதிப்பீடு நிர்ணயம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையரின் உத்தரவுப்படிக்கான விதிமுறைகளை அவரால் நியமிக்கப்பட்ட உதவி புவியியலாளர்களோ , உதவி இயக்குநரோ, துணை இயக்குநரோ பின்பற்றவில்லை என்றால் சரியல்ல . இந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல வரும்போது இந்த தனிப்புகாரில் சம்பந்தப்பட்ட கோப்புகளை, நீதிமன்ற நடவடிக்கைகள் சம்பந்தமாக வாக்குமூலங்களை பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். 07.07.2013 முதல் 19.01.2016 வரை நான் மதுரை மாவட்ட ஆட்சியராக இருந்தேன் என்றால் சரிதான் . 05.11.2020 முதல் 27.05.2021 வரை நான் சென்னை புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் ஆணையர் என்றால் சரிதான். எனது தனிப்புகார் சங்கதிகள் படி 19.07.1966 ம் தேதி அரசாணை எண்.3026 ன்படி இந்த புகார் தாக்கல் செய்ய எனக்கு அனுமதியுள்ளதாக சொல்லி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். MMDR Act 1957 ல் சட்டப்பிரிவு 4 (1- A) என்பது 18.12.1999 சட்டத்திருத்தத்தின் படி நடைமுறைக்கு வந்தது என்றால் சரிதான் . இந்த பிரிவு 4 (1-A) சட்டத்திருத்தத்திற்கு முன்பாக பிரிவு 4(1A) என்ற சட்டப்பிரிவு இதற்கு முன்பு கிடையாது என்றால் சரிதான் . அதனால் 1966 அரசாணையின்படி கற்களை அனுமதியில்லாமல் சேமித்து வைப்பது குற்றமாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் அந்த அரசாணையானது மாவட்ட ஆட்சித்தலைவருக்கு பிரிவு 22 ன் கீழ் வழக்கு தாக்கல் செய்வதற்கு அதிகாரம் வழங்கி வெளியிடப்பட்ட

NANTHINI R JEGANATHAN

Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.13 17:30:19 +0530

அரசாணை ஆகும் . 1966 க்குரிய அரசாணை தேதியில் பிரிவு 4 (1-A) தண்டனைக்குரிய சட்டப்பிரிவு இல்லாத சூழ்நிலையில் அந்த அரசாணையை பயன்படுத்தி4 (1-A)ன் கீழ் இந்த எதிரிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட தனிப்புகார் சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல . பிரிவு 4(1-A) திருத்தத்திற்கு பின்னிட்டு G.O.Ms.No.12 dated 02.02.2009 வெளியிடப்பட்டது என்றால் சரிதான் . அதில் பிரிவு 22 of MMDR Act ன் படி The Governer of Tamilnadu here by authorises the District Forest Officer and the Police Personnel not below the rank of Inspector of Police, to make complaint and writing to the court for any offence punishable under the act or rules made thereunder the respect of cases falling within there jurisdiction என்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரிவு 4 (1-A)திருத்தத்திற்கு பின்னிட்டு மாவட்ட வன அதிகாரிக்கும், காவல் ஆய்வாளருக்கு மேற்பட்ட பதவியில் இருப்பவர்களுக்கும் தான் பிரிவு 22 MMDR Act ன் கீழ் தனிப்புகார் அளிக்க அதிகாரம் வழங்கப்பட்ட சூழ்நிலையில் பழைய அரசாணையின் அடிப்படையில் நான் தாக்கல் செய்த இந்த தனிப்புகார் பிழையானது , ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்கண்ட அரசாணையில் மாவட்ட வன அதிகாரி மற்றும் காவல் ஆய்வாளர் பணிக்கு மேற்பட்டவர்களும் பிரிவு 22 MMDR Act ன் கீழ் புகார் அளிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது . மாவட்ட ஆட்சித்தலைவர் புகார் அளிக்கக்கூடாது என்பதற்கான எந்த முகாந்திரமும் இல்லை.

NANTHINI R JEGANATHAN
Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.13 17:30:24 +0530

இது குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் வழக்கு எண்.CRL.RC (MD).No.1193 of 2025 and CRL.MP (MD).Nos.11575, 11576 and 13079 of 2025 என்ற வழக்கில் மாவட்ட ஆட்சித்தலைவருக்கும் அதிகாரம் உள்ளது என்று மாண்பமை உயர் நீதிமன்றம் சென்னை கிளையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது . இந்த நீதிமன்றத்தில் பாஸ்கர் என்பவருக்கு எதிராக நான் தாக்கல் செய்த தனிப்புகாரில் எனக்கு அதிகாரம் இல்லை என்று உறுதி செய்யப்பட்டு மேற்படி வழக்கு Quash செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது . பாஸ்கருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட புகார் நான் தாக்கல் செய்த புகார் என்றால் சரிதான். பாஸ்கருக்கு எதிராக நான் தாக்கல் செய்த தனிப்புகார் எனக்கு அதிகார வரம்பு இல்லை என்று சொல்லப்பட்டதை ஆட்சேபித்து என்னாலோ , எனக்கு பின் வந்த மாவட்ட ஆட்சியர்களாலோ எந்த ஒரு மேல்முறையீடு ம் செய்யப்படவில்லை என்றால் என்னால் தாக்கல் செய்யப்படவில்லை . மற்றவர்கள் செய்தார்களா என்பது எனக்கு தெரியாது. பாஸ்கர் வழக்கில் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு குறித்து எனக்கு நேரடியாக தெரியும் என்றாலும் , அதனை ஒப்புக்கொண்டால் இந்த வழக்கின் புகாருக்கு எதிராக இருப்பதால் தெரியாது என்று சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. Ex.D.2 ன்படி இதே எதிரிக்கு இதே கிராமத்தில் இரண்டு புலங்களை பொறுத்து கிரானைட் தொழில் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றால் என்னிடம் காட்டப்பட்ட அரசாணையின்படி சரிதான் . அதில் கண்டுள்ள இரண்டு

NANTHINI R JEGANATHAN
Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.13 17:30:31 +0530

புலங்களும் குறிப்பாக புல எண்.398/1 என்பது இந்த வழக்கின் புல எண் .398/3 க்கு அருகில் உள்ள புலம் என்றால் தெரியாது . இந்த எதிரிக்கு அனுமதி வழங்கப்பட்ட புலங்களும் சர்வே எண் .398/3 க்கு அருகில் உள்ள புலங்கள் என்றும் , அவ்வாறு அனுமதி வழங்கப்பட்ட புலங்களுக்கு அருகில் உள்ளதும் , இந்த எதிரிக்கு பாத்தியப்பட்டதுமான இடத்தில் Ex.P.2 படிக்கு கழிவுக் கற்கள் மட்டுமே அங்கு வைக்கப்பட்டிருந்தது என்றால் சரியல்ல . Ex.P.2 அறிக்கையின்படி அந்த கற்கள் வியாபாரத்திற்கு லாயக்கற்ற குறைபாடுகள் கொண்ட கற்கள் என்று சொல்லப்பட்டிருக்கும் சூழ்நிலையில் அதற்கு மாறாக சொல்லப்படுவது தவறு என்றால் சரியல்ல. அங்கு அடுக்கி வைக்கப்பட்ட கற்களுக்கும் மதிப்புண்டு . அந்த கற்களுக்கு எந்த விதமான பண மதிப்பும் இல்லாததால் தான் Ex.P.4 அறிக்கையில் காலம் எண் .7 கைப்பற்றப்பட்ட கனிமங்களின் உத்தேச மதிப்பு என்பது பூர்த்தி செய்யப்படாமல் உள்ளது என்றால் சரியல்ல . கற்களின் மதிப்பினைதொழில் வல்லுநர்கள் கொண்டு தனியாகத்தான் மதிப்பீடு செய்யமுடியும் . இன்றைய தேதி வரை சர்வே எண் .398/3 ல் உள்ளதாக சொல்லப்படும் கற்களின் மதிப்பு புகார் தாக்கல் செய்யப்பட்ட என்னாலோ, எனக்கு பின் வந்த மாவட்ட ஆட்சியர்களாலோ நிர்ணயம் செய்யப்படவில்லை என்றால் என்னுடைய பணிகாலத்தில்மதிப்பீடு செய்யப்படவில்லை. அதற்கு பின்னால் செய்தார்களா என்பது எனக்கு தெரியாது . சென்னை புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநரின் நியமித்த நோக்கம்

NANTHINI R JEGANATHAN
Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.13 17:30:53 +0530

கற்களின் மதிப்பு அறியத்தான் என்றும் , அதனை நிர்ணயிக்காததால் இந்த தனிப்புகார் செல்லதக்கதல்ல என்றால் தனிப்புகாருக்கும் , புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைக்கும் தொடர்பில்லை. சென்னை இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் நடைமுறைபடுத்தி அதிகாரிகள் நியமிக்கப்பட்டு அவர்களின் அறிக்கையின் அடிப்படையில் நான் புகார் தாக்கல் செய்திருக்கும் சூழ்நிலையில் இரண்டுக்கும் தொடர்பில்லை என்று சொல்வது ஏற்கதக்கதல்ல என்றால் தவறு. நான் இந்த வழக்கின் எதிர்மனுதாரரையோ , சம்பந்தப்பட்ட புல எண்ணையோ பார்வையிடவில்லை என்றால் சரிதான். இந்த தனிப்புகாருக்கு முன்பாக இது தொடர்பாக நான் காரணம் கேட்பு அறிக்கை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த தனிப்புகாருக்கு முன்பாக புல எண்.398/3 ல் அனுமதியில்லாமல் கற்கள் வைக்கப்பட்டுள்ளதா க District Task force ல் இருந்தோ அல்லது Taluk Task force ல் இருந்தோ எந்த புகாரும் வரவில்லை என்றால் ஞாபகம் இல்லை. புல எண்.398/3 ல் உள்ளதாக சொல்லப்படும் கற்கள் எந்த தேதி முதல் அங்கு வைக்கப்பட்டது என்பது பற்றியோ , எந்த உபகரணங்களின் உதவியுடன் அங்கு வைக்கப்பட்டது என்பது பற்றியோ நான்தனிப்புகாருக்கு முன்பாக விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. எனது தனிப்புகார், முதல் விசாரணை வாக்குமூலங்களின் அடிப்படையில் இந்த கற்கள் அளவில் பெரியதாக இருப்பதாக சொல்லப்படும் சூழ்நிலையில் இயந்திரங்களின் உதவி

NANTHINI R JEGANATHAN
Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.13 17:30:58 +0530

இல்லாமலும் அவற்றை ஒரே நாளிலும் கொண்டு வந்து வைக்க இயலாது என்றால் சரிதான். இயந்திரங்கள் இன்றியோ, ஒரே நாளிலோ வைக்க இயலாத சூழ்நிலையில் இதைபற்றி எனக்கு தகவல் சொல்லாத வருவாய் துறை அதிகாரிகளுக்கு எதிராகவோ, Task force அதிகாரிகளுக்கு எதிராகவோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான் . குவாரிக்கு அனுமதிக்கப்பட்ட இடத்தில் இருந்து எடுக்கப்படும் விற்பனைக்கு உகந்த கற்கள் சம்பந்தமாக மாவட்ட கனிமவளத்துறைக்கு தகவல் சொல்லி அவர்கள் வந்து ஆய்வு செய்து பெர்மிட் கொடுத்த பிறகே அவற்றை டிரான்ஸ்போர்ட் செய்ய முடியும் என்றால் சரியல்ல . கற்கள் அனுமதி பெற்று டிரான்ஸ்போர்ட் செய்யும்போது எந்த விதிமீறலும் இல்லை என்பதால் தான் இந்த எதிரிக்கு கற்கள் எடுத்துச் செல்ல மதுரை மாவட்ட சுரங்கத்துறையினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றால் அனுமதி வழங்கப்பட்ட புல எண்களில் இருந்து கிரானைட் கற்களை எடுத்துச் செல்வதற்கு சுரங்கத்துறையினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது . அதுபோன்று அனுமதி வழங்குவதற்கு வந்த சுரங்கத்துறை அதிகாரிகள் அனுமதி வழங்கப்பட்ட புல எண்.398/1 க்குஅருகில் உள்ள 398/3 ல் வைக்கப்பட்ட கற்கள் அங்கு பணியில் இருந்த பணியாளர்கள் பாதுகாப்பிற்காகவும் , இயந்திரங்களின் பாதுகாப்பிற்காகவும் விற்பனைக்கு லாயக்கற்ற கற்களாகவும் இருந்ததால் தான் புல எண் .398/3 ல் இருந்த கற்கள் பற்றி அவர்கள் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல .

NANTHINI R JEGANATHAN
Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.13 17:31:03 +0530

விற்பனைக்கு லாயக்கற்ற கற்களையும், அனுமதி பெற்ற குவாரி பணி செய்யும் இடத்தில் மட்டுமே இருப்பு வைக்கப்பட வேண்டும். நான் சொன்ன விளக்கம் என்பது Mines Act section 2 J X க்கு விரோதமானது என்றால் சரியல்ல . புல எண்.398/3 ல் உள்ள கற்கள் Ex.D.2 ல் அனுமதி வழங்கப்பட்ட குவாரியில் இருந்து எடுக்கப்பட்ட உபயோகமற்ற கற்கள் என்பதாலும், அந்த அனுமதி படி குவாரி வேலைகள் முடிந்த பின்பு அதில் ஏற்பட்ட பள்ளங்களை மூடுவதற்காக வும் வைக்கப்பட்டிருந்த கற்கள் என்று சொன்னால் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல . அனுமதி பெறாத புல எண்களில் குவாரி சார்ந்த பொருட்களையோ அல்லது கிரானைட் கற்துண்டங்களையோ இருப்பு வைப்பதற்கு குவாரி உரிமையாளர்களுக்கு உரிமையில்லை. எனது புகாரிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ புல எண் .398/3 ல் உள்ள கற்கள் எங்கிருந்து கொண்டு வந்து வைக்கப்பட்டது என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான் . அது சம்பந்தமாக நான் வருவாய்துறையினரையோ, சுரங்கம் மற்றும் புவியியல் துறை அதிகாரிகளையோ நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான் . அவசியம் இல்லை. எனது தனிப்புகாரின் அடிப்படையில் 2012 ம் ஆண்டிற்கு முன்பாகவே கிரானைட் குவாரிகள் சம்பந்தமாக முறைகேடுகள் கண்டறியபட்ட சூழ்நிலையில் இந்த தனிப்புகாருக்கு முன்பாக இந்த புல எண்ணை நான் பார்வையிடவில்லை என்றால் சரிதான். Letter No.180/2014-Mines dated 01.10.2014 there is a difference between the reports of the 1st and 2nd evaluation team in the volume of granites quarried from

NANTHINI R JEGANATHAN
Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.13 17:31:08 +0530

the leasehold and non leasehold areas என தெரிவித்து MMDR Act பிரிவு 21 (5)ன் கீழ் நடவடிக்கை எடுக்க தமிழக அரசிடம் கடிதம் கொடுத்திருந்தேன் என்றால் அந்த கடிதத்தை பார்த்தால் தான் சொல்லமுடியும். எனது உத்தரவின் கீழ் திரு.மணிமாறன் 27.08.2014 ல் கைப்பற்றுகை மகஜர் தயார் செய்தார் என்றால் சரிதான் . அன்றைய தேதியில் அவரது நாட்குறிப்பில் அவர் தலைமையிடம் மற்றும் சத்திரப்பட்டி , திருப்பாலை ஆதி திராவிடம் மாணவர் விடுதியை பார்வையிட்டதாகத்தான் சொல்லியுள்ளார் என்றும் ,மேற்படி புல எண்ணை பார்வைடயிட்டு கைப்பற்றுகை மகஜர் தயார் செய்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான் . அதனால் இந்த புல எண்.398/3 ல் இருந்து கற்கள் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சங்கதிகள் Ex.D1 ஆவணத்தின் அடிப்படையில் ஏற்கதக்கதல்ல என்றால் சரியல்ல . 29.03.2006 ல் சென்னை புவியியல் துறை இயக்குநர் , மதுரை புவியியல் மற்றும் சுரங்கத்துறைக்கு அனுப்பிய கடிதத்தில் மதுரை மாவட்டத்தில் இருக்கும் recovery percentage ல் கழிவுக் கற்களையும் கணக்கிடவேண்டும் என்று அறிவுறுத்தி கடிதம் எழுதியுள்ளார் என்றால் சரிதான். Recovery percentage கணக்கிடுவதற்கும் அனுமதி இல்லாமல் கிரானைட் கற்களை இருப்பு வைத்துள்ளதற்கும் சம்பந்தம் இல்லை . இந்த எதிர்மனுதாரருக்கு அனுமதிபெற்ற குவாரி இந்த புலத்திற்கு அருகில் இருப்பதால் Ex.D.3 கடிதம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதும் , தொடர்புடையதும் ஆகும் என்றால் சரியல்ல . Ex.D.4 ல் நீதிப்பேராணை மனு 5123/2007 ல் மாண்புமிகு

NANTHINI R JEGANATHAN
Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.13 17:31:13 +0530

உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தாக்கல் செய்த எழுத்துப்பூர்வ ஆட்சேபனையில்குவாரி அனுமதி பெற்றவர்கள்அதற்கு அருகாமையில்உள்ள பட்டா நிலங்களில் கற்கள் வைத்துள்ளார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு கற்கள் வைக்கப்பட்டதாக நீதிப்பேராணை மனுவில் கூறியுள்ளது தவறு என்று சொல்லப்பட்டுள்ளது . கைப்பற்றுகை செய்வதற்காக வருவாய் வட்டாட்சியருக்கு நான் எழுத்துப்பூர்வமான உத்தரவு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் தனிப்புகாருக்கு முன்பாக நில உரிமையாளரிடம் காரணம் கேட்கப்பட்டிருந்தாலோ , நிலத்தின் அருகில் உள்ள நிலங்களின் உரிமையாளர்களிடம் விசாரணை செய்திருந்தாலோ இந்த தனிப்புகாருக்கான அவசியம் ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. எனது கடமையை சரிவர செய்யாமல் தனிப்புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . Mines Act 1952 பிரிவு 2 j and 2 j X and 2j XI ன் வரையறைபடி குவாரி உரிமையாளருக்கு அதன் அருகில் உள்ள பட்டா நிலத்தில் கற்கள் வைத்துக்கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள சூழ்நிலையில் அதற்கு மாறாக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த தனிப்புகார் நிலைநிற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த எதிர்மனுதாரருக்கு குவாரி உரிமம் வழங்கப்பட்ட அரசாணையில் கண்ட நிலங்களும் இந்த புல எண் .398/3 நிலமும் ஒரே காம்பவுண்ட்டிற்குள் இருக்கிறது என்றால் தெரியாது . இந்த சர்வே எண்ணும், எதிர் மனுதாரருக்கு குவாரி உரிமம் வழங்கப்பட்ட புல எண்களும் சேகரமாக ஒரே

NANTHINI R JEGANATHAN
Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.13 17:31:19 +0530

காம்பவுண்டடிற்குள் உள்ளது, அதனை ஒப்புக்கொண்டால் Mines Act 1952 பிரிவு 2 j and 2 j X and 2j XI பிரிவுகளின் அடிப்படையில் இந்த தனிப்புகார் நிலை நிற்க இயலாது என்பதால் நான் அதை மறுக்கிறேன் என்றால் சரியல்ல . இந்த தனிப்புகார் தாக்கல் செய்வதற்கு எனக்கு அங்கீகாரம் இல்லை எ ன்றும் , இந்த தனிப்புகாரை நிலைநிற்கதக்கதல்ல என்பதால் தான் அது குறித்த ஆவணங்கள் அனைத்தும் முழுமையாக மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல . இந்த எதிரிக்கு எதிரான தனிப்புகார் சட்டப்படிக்கும் , சங்கதிகள் படிக்கும் நிலைநிற்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் எனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து தனிப்புகார் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி முடிவடைந்த நேரம் : மதிய இடைவேளைக்காக 01.09 PM மணிக்கு சாட்சி நிறுத்தப்பட்டு மீண்டும் இடைவேளை முடிந்து 02.51 PM ஆரம்பித்து 03.00 மணிக்கு முடிவடைந்தது.

(ஒம்./-)******

சாட்சியால் திறந்த மன்றத்தில் சாட்சியமளிக்கப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு/சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

NANTHINI R JEGANATHAN

Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.13 17:31:32 +0530

சிறப்பு மாவட்ட நீதிபதி,

கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் தொடர்பான

குற்ற வழக்குகள் தனி சிறப்பு நீதிமன்றம்,

மதுரை.